

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி 96வது பிறந்த நாளை முன்னிட்டு புதிதாக அமைக்கப்பட்டுள்ள கோ.சி.மணியின் திருஉருவச் சிலையை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., திறந்து வைத்தார். உடன் கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினரும், சிலை அமைப்பு குழு தலைவர், செயலாளர் குத்தாலம் பி.கல்யாணம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், ஜி.என்.ரவி, முத்துமகேந்திரன். கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்கள் குத்தாலம் க.அன்பழகன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கோ.சி.மணி குடும்பத்தினர் கோ.சி.இளங்கோவன், புகழேந்தி, அன்பு, கீதா மற்றும் பலர் உள்ளனர்.



சென்னைப் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று (18.09.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் சென்னைப் பல்கலைக்கழகம், இதழியல் மக்கள் தொடர்பியல் துறை மற்றும் சென்னை இந்திய ஒலி ஒளிபரப்பாளர் மன்றம் இணைந்து நடத்தும், முனைவர் வெ. நல்லதம்பி எழுதியுள்ள "ஒலியலை ஓவியர்கள்" என்ற நூலினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமெரிக்க துணைத் தூதரகம் உதவித் தூதர் ஜீன் பிரகன்டி, சென்னை பல்கலைக்கழகத்தின் பதிவாளர் பேராசிரியர் ஏழுமலை, பெரியார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் மு. தங்கராசு, இதழியல் மக்கள் தொடர்பியல் துறை இணைப் பேராசிரியர் & துறைத் தலைவர் முனைவர் டி.ஆர். கோபாலகிருஷ்ணன், (பொறுப்பு), சென்னை பல்கலைக்கழகத்தின் இதழியல் துறை உதவி பேராசிரியர் ஜெயசக்திவேல், சென்னை வானொலி நிலையத்தின் முன்னாள் இயக்குநர் கமலநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் ஆகியோர் உள்ளனர்.

# மோடி ஆட்சியால் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் எந்தப் பயனும் இல்லை

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, செப்.19-

3ம் முறையாக பிரதமர் பதவியேற்றுள்ள மோடியின் முதல் 100 நாள் ஆட்சி நாட்டுக்கு மிக கடினமான நாட்களாக இருந்தன என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டியுள்ளார்.



3ம் முறையாக பிரதமர் பதவியேற்றுள்ள மோடியின் ஆட்சி 100 நாட்களை நிறைவு செய்துள்ளது. இந்நிலையில், மோடியின் ஆட்சியில் நாடு இன்னல்களை மட்டுமே சந்தித்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள சமூகவலைத்தள பதிவில், மோடியின் 100 நாள் ஆட்சி நாட்டுக்கு மிக கடினமான நாட்களாக இருந்தன என்று விமர்சித்துள்ளார்.

மக்கள் நலனுக்கான எந்த திட்டமும் இல்லை, எந்த பொறுப்பும் இல்லை, ஒரே பசப்பு வார்த்தைகள், அந்தர் பல்டிகள் என மோடி அரசு நாட்டையும், நாட்டு மக்களையும் ஏமாற்றி வருவதாக அவர் சாடி யுள்ளார்.

இந்த மோசடியாளர்களிடம் சிக்கி நாடு சோர்வடைந்துள்ளதாக மல்லிகார்ஜுன கார்கே கவலை தெரிவித்துள்ளார். மோடி ஆட்சியால் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் எந்த பயனும் இல்லை என்று தெரிவித்துள்ள அவர், இனியும் மோடி ஆட்சியை மக்களால் சகித்துக் கொள்ள முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

மோடியின் 100 நாள் ஆட்சி மிக மோசம் மல்லிகார்ஜுன கார்கே மோடியின் 100 நாள் ஆட்சி நாட்டுக்கு மிக கடினமான நாட்களாகவே இருந்தன மக்கள் நலனுக்கான எந்த திட்டமும் இல்லை, எந்தப் பொறுப்பும் இல்லை, ஒரே பசப்பு வார்த்தைகள், அந்தர் பல்டிகள் மோடி அரசு நாட்டையும், நாட்டு மக்களையும் ஏமாற்றி வருகிறது.

மல்லிகார்ஜுன கார்கே இந்த மோசடியாளர்களிடம் சிக்கி நாடு சோர்வடைந்துள்ளது என மல்லிகார்ஜுன கார்கே கவலை தெரிவித்துள்ளார்.

### ராகுல்காந்திக்கு கொலை மிரட்டல் விடுத்த விவகாரம்

# ஒன்றிய அமைச்சர் ரவ்நீத் உள்பட 4 பேர் மீது வழக்கு!

## காங்கிரஸ் கட்சி சார்பில் காவல்நிலையத்தில் புகார்!

டெல்லி, செப்.19-

இதனிடையே, ராகுல் காந்திக்கு கொலை மிரட்டல் விடுத்த ஒன்றிய ரயில்வே இணையமைச்சர் ரவ்நீத் உட்பட 4 பேர் மீது டெல்லி துக்ளக் சாலையில் உள்ள காவல்நிலையத்தில் காங்கிரஸ் கட்சி புகார் அளித்துள்ளது.

உத்தரப்பிரதேச மாநில அமைச்சர் ரகுராஜ் சிங் மற்றும் தர்விந்தர் சிங் மர்வா ஆகிய பா.ஜ.க. தலைவர்கள் மற்றும் மகாராஷ்டிரா முதலமைச்சர் ஏக்னாத் ஷிண்டே தரப்பு எம்.எல்.ஏ., சஞ்சய் கெய்க்வாட் உள்ளிட்டோர் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது.

ராகுல்காந்திக்கு கொலை மிரட்டல் விடுத்து, வெறுப் புணர்வை தூண்டும் வகையில் பேசிய இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகார் மனுவில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமை!

# மயிலாடுதுறையில் அனைத்துதுறை வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக ஆய்வுக்கூட்டம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. - எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

மயிலாடுதுறை,செப். 19-

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில், மாவட்ட ஆட்சியர் ஏ.பி. மகாபாரதி, மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் உமாமகேஸ்வரி சங்கர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.60 ஆயிரத்து 269 மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களும், 2 பயனாளிகளுக்கு ரூ.13 ஆயிரத்து 104 மதிப்பிலான சலவை பெட்டிகளும், கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் 11 நபர்களுக்கு புதிய உறுப்பினர் அடையாள அட்டையையும், வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் ஒருவருக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையையும், மாவட்ட

வழங்கல்துறை சார்பில் 15 நபர்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும், சமூக

நலத்துறையின் சார்பில் முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 5 பயனாளிகளுக்கு ரூ.2 லட்சத்து 51 ஆயிரத்து 747 மதிப்பிலான முதிர்வு தொகைக்கான காசோலைகளும் வேளாண்மைத்துறை சார்பில் 6 பயனாளிகளுக்கு ரூ.11 ஆயிரத்து 800 மதிப்பிலான இடுபொருட்கள் என மொத்தம் 50 பயனாளிகளுக்கு ரூ.3 லட்சத்து 36 ஆயிரத்து 920 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தமிழ்நாடு முதலமைச்சரின் மீண்டும் மஞ்சப்பையையும் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்கள்.

கூட்ட முடிவில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறுகையில்

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை, நீர்வள ஆதாரத்துறை, பொதுப் பணித்துறை, மீன்வளத் துறை உள்ளிட்டத்துறைகளின் மூலம் மேற்கொள்ளப் பட்டுவரும் திட்டப்பணிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் நிதி, நாடாளுமன்ற உறுப்பினர் நிதி ஆகியவைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளின் தற்போது உள்ள நிலை குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. அதன் அடிப்படையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் அனைத்து வளர்ச்சித்திட்டப் பணிகளும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கிட்டத்தட்ட 90 சதவீதத்திற்கு மேலாக பணிகள் நிறைவுற்று உள்ளது. குறிப்பாக குறுவை சாகுபடியை பொருத்தவரை 39 ஆயிரம் ஹெக்டேர் சாகுபடி பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதில் 26 ஆயிரம் ஹெக்டேர் நெல் அறுவடை பணிகள் முடிவுற்று உள்ளது. அதேபோல் சம்பாவிற்கு தேவையான உரம் மற்றும் விதைகள் தேவையான அளவிற்கு கையிருப்பு உள்ளது. விவசாயிகளுக்கு விவசாய கடன் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆலோசிக்கபட்டது.

நேரடி நெல் கொள் முதல் நிலையங்களின் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் பாதுகாப்பாக வைக்கப்பட்டுவருகிறது. நீர்வளத்துறையின் மூலம் அனைத்து வாய்க்கால்களும் தூர்வாரப்பட்டுள்ளது. கடைமடைக்கு பாசனநீர் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளது. மயிலாடுதுறையில் மாவட்ட நூலகம் கட்டுவதற்கு தேவையான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவுற்று உள்ளது. விரைவில் கட்டுமான பணிகள் துவங்கப்படும். மயிலாடுதுறை மாவட்டத்தில் மக்களுக்கு தேவையான அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் இவ்வாறு சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆய்வு கூட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர் எஸ். செல்வமணி,தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், நகரக் கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், ம.சுப்பராயன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் என். இளையபெருமாள், எம்.அப்துல்மாலிக், ப.முருகமணி, ஏ.ஆர். ராஜா, கு. வைத்தியநாதன், பஞ்சுகுமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.கே.மருது,

மயிலாடுதுறை நகர துணை செயலாளர் ஆர். கே.சங்கர், மாவட்ட கூடுதல் ஆட்சியர் மு.சபிர ஆலம், மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் விஸ்ணுபிரியா, ஒன்றியக் குழு தலைவர்கள் காமாட்சிமூர்த்தி, நந்தினி ஸ்ரீதர், மகேந்திரன், ஜெயபிரகாஸ், சீர்காழி நகர்மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி மற்றும் அனைத்து துறை அரசு உயர் அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் - ஆத்தூர் சாலையை

# 4 வழிச் சாலையாக மாற்றிட வேண்டும்!

## ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரியிடம் அருண் நேரு எம்.பி. கோரிக்கை!

திருச்சி, செப். 19-

பெரம்பலூர் ஆத்தூர் சாலையை 4 வழிச் சாலையாக மாற்ற எம்.பி அருண் நேரு கோரிக்கை ஒன்றிய நெடுஞ்சாலை துறை அமைச்சர் நிதின் கட்கரியை சந்தித்து கோரிக்கை வைத்தார்.

பெரம்பலூர் முதல் ஆத்தூர் வரையிலான 4 வழிச் சாலை திட்டத்தை விரைவுபடுத்தக் கோரி அத்தொகுதியின் தி.மு.க. எம்.பி. அருண் நேரு, ஒன்றிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரியை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

தஞ்சையில் இருந்து அரியலூர், பெரம்பலூர், வீரகனூர், ஆத்தூர், வாழப்பாடி வழியாக சேலத்திற்கும், சேலத்தில் இருந்து தஞ்சாவூருக்கும் நாள்தோறும் விரைவு அரசு பஸ்கள் இயக்கப்படுகின்றன. இதில் தினமும் ஏராளமான பொதுமக்கள் பயணித்து வருகின்றனர்.

அதே போன்று அரியலூரில் இருந்து பல டன் சிமெண்ட் மற்றும் சரக்குகள் லாரிகளில் ஏற்றி

சேலம் மற்றும் பிற மாவட்டங்களுக்கு ஆத்தூர் வழியாக கொண்டு செல்லப்படுகிறது. மேலும் தற்போது பெரம்பலூரில் மருத்துவக்கல்லூரி,

பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ-மாணவிகளும் இந்த வழியில் பேருந்துகளை பயன்படுத்தி வருவதால் இந்த சாலை முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

இதனையடுத்து கடந்த 2019ஆம் ஆண்டு பெரம்பலூர்ஆத்தூர் விரிவுபடுத்திட சாலையையும் அரசின் ஒன்றிய நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.19 கோடியே 60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றன.

இந்த நிலையில் பெரம்பலூர் முதல் ஆத்தூர் வரையிலான 4 வழிச் சாலைத் திட்டத்தை விரைவுபடுத்தக் கோரி பெரம்பலூர் தொகுதி திமுக எம்.பி., ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரியை டெல்லியில் சந்தித்து கோரிக்கை வைத்துள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், "பெரம்பலூர் முதல் ஆத்தூர் வரையிலான 4 வழிச் சாலைத் திட்டம் குறித்து ஒன்றிய சாலைப் போக்குவரத்து ம் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரியை சந்தித்து கோரிக்கை வைத்தேன்.

இந்தச் நெடுஞ்சாலையானது உள்ளூர் விவசாயிகள் மற்றும் வணிகர்களின் வளர்ச்சிக்கு ஒரு பெரும் திருப்புமுனையாக அமைவதோடு அல்லாமல் சரக்கு போக்குவரத்தை அதிகரித்து அப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

# ரூ.2,104 கோடி சந்திரயான்4 திட்டம்!

## ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்

புதுடெல்லி, செப்.19-

ரூ.2,104 கோடி மதிப்பில் சந்திரயான்4 திட்டத்தை செயல்படுத்த ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. ரூ.1,236 கோடியில் 2028ல் வெள்ளி கிரகத்தில் ஆய்வு செய்வதற்கான செயற்கைக் கோளை அனுப்பும் திட்டத்துக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

விண்வெளி வீரர்களை சந்திரனுக்கு அனுப்பும் திட்டத்தை சந்திரயான் 4 விண்கலம் மூலம் செயல்படுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.



நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஈ.வெ.ரா அவர்களின் பிறந்த தினமான செப்.17 அன்று நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அறிவிப்பிற்கிணங்க "சமூக நீதி நாள்" முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில், இனமான பேராசிரியர் அரங்கத்தில் 'சமூகநீதி நாள்' உறுதிமொழி மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில் ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டாக்டர். இரா.மாயவன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடிவடக்கு ,பேரூர் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 116 வது பிறந்த நாளை முன்னிட்டு திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முன்னாள் எம்.எல்.ஏ. வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சுப.மதியரசன் தலைமையில் பேரூர் கழக செயலாளர் பி.ஏ.நஜ்மூதீன் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.